1981 ஏப்ரல் 9]

திரு. பி. எஸ். துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கும், ஆந்திரத்திற்கும் மையத்திலே இணைப்புச் சாலைகள் அமைந்திருக்கின்ற இடத்திலே அது இருப்பதால் அங்கே சுற்றுலா விடுதி கட்டினால் அங்கே வந்து தங்குகிறவர்களுக்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு மேலும் அந்த இடத்திலே கட்டுவதற்கு உத்தேசம் உண்டா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அந்த வினாவிற்கு விடையளிக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு தேசிய நெடுஞ்சாலையில் உள்ள போக்குவரத்து முக்கியமாக உள்ள இடமாக இருப்பதால் தேசிய நெடுஞ்சாலை எண் 46, கிருஷ்ணகிரியில் உள்ள போகனப்பள்ளி கிராமத்திற்கு அருகில் சாலையோர தங்கும் விடுதியொன்று அமைக்க திட்டமிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த விடுதியில் 10 அறைகளையும் உணவு உட்கொள்ளும் அறையையும் உரையாடல் கூடமும் சமையல் அறையும் மற்றும் மேலாளர் அறையும் கட்டப்படுகிறது. அதன் மதிப்பீடு சுமார் 7.5 இலட்சம் ரூபாய் என்று சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினர் தகவல் தந்திருக்கிறார்கள்.

திரு. பி. தீர்த்தராமன் : தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியில் கட்டவில்லையென்றாலும் ஓசூரில், அது தொழில் அபிவிருத்தி அதிகமாக உள்ள இடமாக இருப்பதால், அங்கே வந்து தங்குகிறவர்களுக்கு வசதியாக இருக்கின்ற முறையிலே அங்கேயாகிலும் கட்ட அரசு முன்வருமா.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, ஓசூர் இப்போதுதான் வளர்ச்சியடைந்து கொண்டு வருகிற தொழிற் பகுதியாக விளங்கிக் கொண்டு இருக்கிறது. ஓசூருக்கு வருகின்றவர்கள் அநேகமாக பெங்களூரிலே இறங்கி அங்கே வந்து விட்டு பெங்களூருக்கே சென்று விடுகிறார்கள். எதிர்காலத்திலே அதன் வளர்ச்சியைக் கருதித்தான் சுற்றுலா விடுதி அங்கே கட்ட இயலுமா என்பதை சுற்றுலாத்துறை பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 714 முதல் 717 வரை உள்ளாட்சித் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

தேவக்கோட்டை அரசு மருத்துவமனை.

*வினா எண் 718—திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தேவக்கோட்டையில் உள்ள அரசினர் மருத்துவமனை தலைமை அதிகாரி மீது புகார்கள் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :

(அ) ஆம்.

(ஆ) தேவக்கோட்டை அரசினர் மருத்துவமனை மருத்துவ அதிகாரி டாக்டர் இராசலட்சுமி மீது கூறப்பட்ட புகார் குறித்து இராமநாதபுரம் மாவட்ட மருத்துவ அதிகாரி விசாரணை நடத்தி அரசுக்கு அறிக்கையொன்றினை அளித்துள்ளார்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, அரசினர் மருத்துவமனையிலே பணி புரியும் மருத்துவ அதிகாரிகள் 3 ஆண்டுகளுக்குமேல் தொடர்ச்சியாக இருந்திருக்கிறார்கள். 3 ஆண்டுகளுக்கு மேல் வேலை செய்யக்கூடியவர்களை மாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? இதிலே அரசாங்கத்தினுடைய கொள்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் இராசலட்சுமி என்பவர் 1979ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள்முதல் தேவக்கோட்டை அரசினர் மருத்துவ மனையில் மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். இப்போது 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 3 ஆம் நாளன்று அந்த இடத்திலிருந்து வேறு ஒரு இடத்திற்கு மாற்றப் பட்டு இருக்கிறார்.

பெரணமல்லூர் தொகுதியில் மருத்துவமனை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 719—திரு. பி. எம். வெங்கடேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதியில் ஒன்றியத்தின் பொது பண்டில் இருந்து மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:

இல்லை.

திரு. பி. எம். வெங்கடேசன் : தலைவர் அவர்களே, பெரணமல்லூர் பேரூராட்சியிலே எந்தவிதமான நிதி வசதியும் இல்லாத காரணத்தாலும் அங்கே 15 ஆயிரம் மக்கள் தொகை இருக்கின்ற காரணத்தினாலும் உடனடியாக இனியாவது மருத்துவ மனையை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, விடை இல்லை என்று தான் சொன்னேன். இப்போதும் அதையே தான் சொல்ல வேண்டும்.